பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 04 2026 FRIDAY 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தொகுதி மறுவரையறை உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதாக்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமனதாக ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர் 50 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் சிறப்பாக பணியாற்றி வருவதாக மத்திய இணை அமைச்சர் திருமதி. Raksha Khadse கூறியுள்ளார்.

- வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் தென்கொரியாவும் முடிவு செய்துள்ளன.

- அணுசக்தி விவகாரத்தில் அமெரிக்கா - ஈரான் இடையே ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

- ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், சென்னை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், மக்களவை தொகுதி மறுவரையறை உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதாக்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமனதாக ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு , இது தொடர்பாக காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மசோதாகள் மீதான வாக்கெடுப்பு இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக நேற்று மக்களவையில், இந்திய அரசியலமைப்பின் 131-வது திருத்தச் சட்டம் 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் திருத்த மசோதா மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா ஆகியன தாக்கல் செய்யப்பட்டன.

மசோதாக்கள் மீது பல்வேறு கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் பேசினர். இந்த விவாதம் நள்ளிரவு வரை நடைபெற்றது.

விவாதத்தின் போது குறுக்கிட்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மக்களவை தொகுதி மறுவரையறை மாசோதா நிறைவேறினால் கேரளம் மாநிலத்தின் 20 இடங்கள் 30-ஆக உயர்த்தப்படும் என்றும், அம்மாநிலத்தின் பலம் குறைய வாய்ப்பில்லை என்றும் தெரிவித்தார்.

ஆந்திரப் பிரதேசத்திற்கான மக்களவை தொகுதிகள் 25-லிருந்து 38-ஆகவும், தெலங்கானாவின் தொகுதிகள் 17-லிருந்து 26-ஆகவும் அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

கர்நாடகா மாநிலத்தில் தற்போதுள்ள 28 தொகுதிகள் 42 தொகுதிகளாக அதிகரிக்கும் என்றும் ஒட்டுமொத்தமாக தென் இந்தியாவில் தற்போதுள்ள 129 மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 195-ஆக உயரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதால் தற்போது நடைபெறவுள்ள தேர்தல்களில் எவ்வித மாற்றமும் இருக்காது.

2029-ம் ஆண்டு வரை நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களும் தற்போதுள்ள தொகுதிகளின் அடிப்படையிலேயே நடத்தப்படும் என்றும் திரு. அமித் ஷா உறுதியளித்தார்

>>>>>><<<<<<

கிராம ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் ஏற்கனவே 50 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் மகளிர் மிகச் சிறப்பாக பணியாற்றி வருவதாக மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை இணை அமைச்சர் திருமதி. Raksha Khadse கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தற்போது நாடாளுமன்றத்தில் இதுதொடர்பாக கொண்டு வரப்பட்டுள்ள மசோதா, பெண்கள் அதிக எண்ணிக்கையில் மக்களவை மற்றும் மாநிலங்களவை உள்ளிட்ட சட்டப்பேரவைகளுக்குள் நுழைந்து மக்கள் பணியாற்ற ஒரு பெரும் வாய்ப்பை வழங்கும் என்றார்.

அரசியலில் முத்திரை பதித்து வரும் மகளிருக்கு, இந்தச் சட்டம் தேசிய அளவிலும் மாநில அளவிலும் அதிகாரமிக்க இடங்களை உறுதி செய்யும் என்று திருமதி. Raksha Khadse கூறினார்.

>>>>>><<<<<<

மகளிர் இடஒதுக்கீடு என்பது காலத்தின் கட்டாயம் என்று மத்திய அமைச்சரும், லோக் ஜனசக்தி கட்சியின் தலைவருமான திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்கு உரிய பங்கை மக்களவை தொகுதி மறுவரையறை மசோதா உறுதி செய்வதாகவும், இதன்மூலம் மகளிர் சமமான வளர்ச்சியைப் பெறுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்ட போது அனைவரும் ஆதரவு தெரிவித்த நிலையில், தற்போது அதனை நடைமுறைப்படுத்தும் நேரத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபடுவது ஏன் என்றும் திரு. சிராக் பாஸ்வான் கேள்வி எழுப்பினார்.

>>>>>><<<<<<

திரிபுரா மாநிலத்தில் பழங்குடியினருக்கான மாவட்ட தன்னாட்சி கவுன்சில் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்குத் தொடங்குகிறது.

மொத்தம் உள்ள 28 இடங்களுக்கான இந்த தேர்தல் கடந்த ஏப்ரல் 12-ம் தேதி நடைபெற்றது.

17 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

பழங்குடியினருக்கான தன்னாட்சி கவுன்சில் தேர்தலில் சுமார் 83 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவானது.

>>>>>><<<<<<

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், தென்கொரிய வர்த்தக அமைச்சர் திரு. Yeo Han - Koo உடன் காணொலி வாயிலாக நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார்.

அப்போது, இந்தியா மற்றும் தென்கொரியா இடையிலான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவான ஆலோசனை மேற்கொண்டனர்.

*இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. பியூஷ் கோயல், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்*

>>>>>><<<<<<

*இனி தேர்தல் களம்...*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

*தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது விருதுநகர் மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.*

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 3 mins 20 sec..)*

>>>>>><<<<<<

*அமெரிக்கா - ஈரான் இடையே நீண்டகாலமாக நிலவி வரும் அணுசக்தி விவகாரத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.*

*வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பயன்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க ஈரான் ஒப்புக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.*

*இருநாடுகளுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்துள்ளன என்றும், இதன் மூலம் உலகிற்குத் தடையற்ற எண்ணெய் விநியோகம் மற்றும் ஹார்முஸ் நீரிணையில் அமைதியான போக்குவரத்துச் சூழல் உருவாகும் என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்தார்.*

*இந்நிலையில் மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியாக, இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே பத்து நாட்களுக்கு போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.*

*லெபனான் அதிபர் திரு. ஜோசப் அவ்ன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூவுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.*

இந்தத் தற்காலிக போர் நிறுத்தத்தை இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாஹூ உறுதிப்படுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், சென்னை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ஒடிசா அணி - மொஹமதன் அணியை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஈஸ்ட் பெங்கால் – பெங்களூரு அணிகளுக்கு இடையேயான ஆட்டம் 3-3 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

>>>>>><<<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று பஞ்சாப் அணி, 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

இன்றிரவு மணி 7.30-க்கு அஹமதாபாதில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>END<<<<<<